Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 352/2020 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஈஸ்வரமூர்த்தி |
| Father's Name | – | வேலுச்சாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 23rd February 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A3 present. A1,A2,A4 absent. 317 petition filed and allowed.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கோட்டாம்பட்டியில் குடியிருந்து கொண்டு லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 08.07.2019 ம் தேதியன்று கோட்டாம்பட்டி பொதுக்கழிப்பிடம் முன்பு லாரியை நிறுத்திவிட்டு வீட்டிற்குச் சென்றேன். என் லாரிக்கு முன்னால் சண்முகம் என்பவரின் லாரி நின்றுகொண்டிருந்தது. எனக்கு பின்னால் இளங்கோவன் என்பவர் லாரியை நிறுத்தினார். நான் மறுநாள் காலையில் சென்று லாரியைப் பார்த்தபோது எனது லாரியில் உள்ள பாட்டரி காணவில்லை. அவர்களது லாரிகளிலும் பாட்டரிகளைக் காணவில்லை. பின்பு நான் அவசர வேலையாக வெளியூர் சென்றுவிட்டேன். மேற்படி சம்பவம் குறித்து வெளியூரில் இருந்து வந்து 21.07.2019 ம் தேதியன்று காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அசாஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சண்முகம் என்பவர் வாடிக்கையாக அங்குதான் வண்டியை நிறுத்துவார். இளங்கோவன் புளியம்பட்டியைச் சேர்ந்தவர். அன்றுதான் புதிதாக வண்டியை அன்றுதான் நிறுத்தினார். நான் புகாரில் பாட்டரியின் நிறுவனம் குறித்துக் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாட்டரி காணாமல் போன விஷயம் காலை 7.30 மணியளவில் தெரிந்தது. கோட்டாம்பட்டியில் கேகேஜி கல்யாண மண்டபம் அருகில் செக் போஸ்ட் உள்ளது என்றால் சரிதான்.

அங்கு நின்றுகொண்டிருந்த போலிசாரிடம் நான் தகவல் தெரிவிக்கவில்லை. பாட்டரி காணாமல் போன 7.30 மணிக்கு சண்முகம், இளங்கோவனுக்கு தகவல் சொல்லி வரவழைத்தேன். நான் அவசர வேலையாகச் சென்றுவிட்டேன். சண்முகம், இளங்ககோவன் ஆகியோருக்கு அவசர வேலை இல்லை, ஆனால் அவர்கள் காவல்நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை. 21.07.2019 ம் தேதியன்று நான் புகார் அளிக்கச் சென்றபோது சண்முகம், இளங்கோவன் ஆகியோர் வந்திருந்தனர். நான் வரும்வரை காத்திருந்தனர்.

மற்ற இருவரின் லாரியில் உள்ள பாட்டரியின் விபரம் குறித்து எனக்குத் தெரியாது. நான் நீதிமன்றத்தில் மனு செய்து பாட்டரியைப் பெற்றுக்கொண்டேன். அதன் நிறுவனம் குறித்து எனக்குத் தெரியாது. நான் பெற்றுச் சென்றது காணாமல் போன பாட்டரி அல்ல வேறு பாட்டரி ஆகும். இவ்வழக்கு பற்றி தெரியாது என்றாலும் புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும்

**இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(S/d.Tr.E. Pragasam.,B.A.,B.L.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.